**செய்தி வெளியீடு எண்: 512** **நாள்: 31.08.2012**

# தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

சென்னை, மெரினா கடற்கரைப்பகுதியில் நொச்சிக்குப்பம், நொச்சிநகர், டொம்மிங்குப்பம், செல்வராஜபுரம், பட்டினப்பாக்கம் மற்றும் சீனிவாசபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் 26.12.2004 அன்று ஏற்பட்ட **"சுனாமி"** ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்டதன் காரணமாக அக்குடியிருப்புகளை அகற்றி சுனாமி பேரிடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் சேர்த்து 7320 புதிய குடியிருப்புகள் உலக வங்கி நிதி உதவியுடன் அமைக்க 12/2006 ல் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

இவற்றுள் முதற்கட்டமாக நொச்சிநகர் (636), நொச்சிக்குப்பம் (816) மற்றும் டொம்மிங்குப்பம் (828) ஆகிய பகுதிகளில் மொத்தம் 2280 புதிய குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டது.

இப்பகுதிகளை அடுத்துள்ள பட்டினப்பாக்கம் மற்றும் சீனிவாசபுரம் பகுதி மக்கள் போதிய ஒத்துழைப்பு நல்காததால் இப்பகுதிகளில் உலக வங்கித் திட்டத்தின் கீழ் கட்டப்பட இருந்த 3576 (பட்டினப்பாக்கம் – 992 மற்றும் சீனிவாசபுரம் – 2584) அடுக்குமாடிக் குடியிருப்புகள் உலக வங்கித் திட்டத்திலிருந்து **அரசு ஆணை எண்: 46 வருவாய், நாள்: 29.01.2010**ன்படி கைவிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நொச்சி நகர் பகுதி மக்கள் முழு ஒத்துழைப்பு அளித்ததன் அடிப்படையில் நொச்சி நகர் பகுதியில் 628 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணி துவக்கப்பட்டு தற்சமயம் 09/12ல் முடிவுறும் நிலையில் உள்ளன.

மேலும், நொச்சிக்குப்பம் மற்றும் டொம்மிங்குப்பம், செல்வராஜபுரம் பகுதி மக்கள் இத்திட்டத்திற்கு போதிய ஒத்துழைப்பு தராததாலும் இத்திட்டத்திற்கான உலக வங்கியின் நிதியுதவி 31.12.2011ல் முடிவுற்றதாலும் இப்பகுதிகளில் கட்ட உத்தேசித்த 1644 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணியினை மேற்கொள்ள இயலவில்லை.

எனினும், நொச்சிக்குப்பம் பகுதியில் 1970–71ல் தரைதளம் மற்றும் இரண்டு மாடிகள் அமைப்பில் கடலுக்கு மிகஅருகாமையில் கட்டப்பட்ட குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் நொச்சிக்குப்பம் பகுதியில் மாநில அரசின் நிதியுதவியுடன் புதிய அடுக்குமாடிக்குடியிருப்புகள் கட்டும் திட்டத்தினை செயல்படுத்திட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் பலனாக சுமார் 50சதவீத பயனாளிகள் தங்கள் வீடுகளைக் காலி செய்து விட்டு மாற்றிடத்திற்கு இடம் பெயர்ந்தனர். மீதமுள்ள பயனாளிகள் ஒத்துழைக்க தொடர்ந்து மறுத்து வருகின்றனர்.

இது குறித்து இப்பகுதி மக்களுடன் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் வாரிய தலைவர் மற்றும் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியோர் பலமுறை கலந்து பேசியும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை.

இக்குடியிருப்புகள் தற்சமயம் குடியிருப்பதற்குத் தகுதியற்ற நிலையில் இருப்பது குறித்து இப்பகுதி மக்களுக்கு பலமுறை நேரிலும், அறிவிப்பு பலகை மூலமும், மாநகராட்சி கட்டிட விதிகள் தொடர்பாக விளம்பரம் மூலமும் எடுத்துரைக்கப்பட்டது. ஆனால், இப்பகுதி மக்கள் இவையனைத்தையும் உதாசீனப்படுத்தி தொடர்ந்து பழுதடைந்துள்ள இக்குடியிருப்புகளை காலி செய்யாமல் அவற்றிலேயே வசித்து வருகின்றனர்.

**எனவே, எதிர்வரும் மழைக் காலங்களில் எதிர்பாராது ஏற்படும் விபத்துகளால் ஏதேனும் பொருட்சேதம் மற்றும் உயிர் சேதங்களைத் தவிர்க்க இக்குடியிருப்புகளக் காலி செய்துவிட்டு குடிசைமாற்று வாரியம் ஏற்பாடு செய்துள்ள தற்காலிகக் குடியிருப்புகளுக்குச் (Temporary Shelters) சென்று புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தினை செயல்படுத்த ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு ஏதேனும் சேதம் ஏற்படின் வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

மேலாண்மை இயக்குநர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**